# துவாக்குடி நகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறைகள்

## முன்னிலை: திரு. இ. பட்டுச்சாமி.,

ந.க.எண். 1678/எப்1/2023 நாள். 05.02.2024

| | |
|---|---|
| பொருள் | குடியிருப்பு மனைப்பிரிவு – துவாக்குடி நகராட்சி – துவாக்குடி கிராமம் சர்வே எண். 4/4A & 2.18 ஏக்கர் பரப்பளவில் அமையும் மனைப்பிரிவிற்கு ஒப்புதல் அளித்து உத்தரவிடுதல் – தொடர்பாக. |
| பார்வை | 1. அரசாணை எண். 181 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை UD4(1)) துறை நாள்- 09.12.2020 மற்றும் TNCDBR-2019 விதி எண். 47(11)<br>2. மனைப்பிரிவு உரிமையாளர், மனைப்பிரிவில் அமையும் சாலைகள் மற்றும் பூங்காவின் நகராட்சிக்கு தானமாக வழங்கிய திருவெறும்பூர் சார்பதிவாளர் அலுவலக தானப்பத்திர ஆவண எண்.6052/2023 நாள் 03.08.2023<br>3. இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் ந.க.எண்.12556/2023/திமா–3, நாள்.29.08.2023<br>4. மனைப்பிரிவு உரிமையாளர் திரு.A.முத்தழகன் S/o.அய்யாவு அவர்களின் விண்ணப்பம் நாள் 09.11.2023<br>5. நகராட்சி பொறியாளர் துவாக்குடி நகராட்சி அவர்களின் குறிப்பு நாள். 05.01.2024<br>6. நகர்மன்ற தலைவர், துவாக்குடி நகராட்சி அவர்களின் முன் அனுமதி நாள்.05.02.2024 |

**உத்தரவு :**

பார்வை 1ல் காணும் அரசாணையின் படி, மனைப்பிரிவு உரிமையாளர் பார்வை 2ல் காணும் தானபத்திர எண்.6052/2023 நாள் 03.08.2023 ன் படி சாலைகள், மூலைமுடுக்குகள் ஆகியவற்றினை நகராட்சி ஆணையருக்கு தானமாக பத்திரபதிவு செய்து வழங்கி மனைப்பிரிவிற்கு ஒப்புதல் கோரி விண்ணப்பித்துள்ளார். மேலும், மின்சார வாரியத்திற்கு தானமாக வழங்கவேண்டிய இடத்தினை தானபத்திர ஆவண எண்.6052/2023 நாள் 03.08.2023–ன் படி தானமாக வழங்கியுள்ளார் மற்றும் OSR கட்டணம் ரூ.9,83,063/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து என்பத்தி மூன்றாயிரத்தி அறுபத்து மூன்று மட்டும்) உரிய கணக்கில் செலுத்தியுள்ளார்.

மேற்கண்ட மனைப்பிரிவிற்கு பார்வை 3ல் காணும் இணை இயக்குநர் / உறுப்பினர் செயலர் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதத்தில் குடியிருப்பு மனைப்பிரிவு வரைபடத்திற்கு சிறப்பு நிபந்தனைகளுடன் ம.வ/ந.ஊ.இ.இ(திமா) எண்.108/2023 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு, மனைப்பிரிவு வரைபடத்திற்கு திட்ட அனுமதி எண்.108/2023 என எண்ணிடப்பட்டு 26 எண்ணிக்கை மனைகள் அடங்கிய மனைப்பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி உத்திரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து பார்வை 4–ல் கண்டுள்ள விண்ணப்பத்தில் மனைப்பிரிவு உரிமையாளர் திரு.A.முத்தழகன் S/o.அய்யாவு என்பவர் துவாக்குடி கிராமம் சர்வே எண். 4/4A & 2.18 ஏக்கர் பரப்பளவில் அமையும் நிலத்திற்கு குடியிருப்பு மனைப்பிரிவு அனுமதி வழங்கக்கோரியுள்ளார்.

மேற்படி மனைப்பிரிவு உரிமையாளர் விண்ணப்பத்தில் கேட்டுக்கொண்டுள்ளபடி, இணை இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி அவர்களின் திட்ட அனுமதி உத்திரவினையடுத்து, பார்வை 5ல் கண்டுள்ளபடி நகராட்சி பொறியாளர் ஆய்வு மேற்கொண்டு, அடிப்படை வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளபடி இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு நிபந்தனைகளுக்குட்பட்டு நகர் ஊரமைப்புத்துறை அங்கீகாரத்தின்படியும், மனைப்பிரிவு வரைபடத்தின்படியும் அங்கீகரித்து உத்திரவிடப்படுகிறது.

**இணைப்பு:-** மனைப்பிரிவு ஒப்புதல் வரைபடம்
மற்றும் நிபந்தனைகள்.

ஆணையாளர்,
துவாக்குடி நகராட்சி

**பெறுதல்**

திரு.A.முத்தழகன்,
S/o.அய்யாவு,
பிருந்தாவனம் நகர்,
உப்புகார தெரு,
மன்னார்குடி, திருவாரூர்.

**நகல்.**

1. நகரமைப்பு ஆய்வர், துவாக்குடி நகராட்சி.
2. வருவாய் ஆய்வாளர், காலிமனை வரிவிதிப்பு செய்து வசூல் செய்ய நடவடிக்கைக்காக.
3. நகராட்சி பொறியாளர்– நகராட்சிக்கு தானமாக பெறப்பட்ட சாலைகள், உள்ளாட்சி மற்றும் மின்சாரத்துறைக்கான இடங்கள் விவரத்தினை சொத்து பதிவேடு மற்றும் சாலைப் பதிவேட்டில் பதிவு செய்ய.
4. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், திருவெறும்பூர்
5. நில அளவையர், வட்டாட்சியர் அலுவலகம், திருவெறும்பூர்.
6. இணை இயக்குநர்/உறுப்பினர் செயலர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், காஜா மலை மெயின் ரோடு, காஜா மலை, திருச்சிராப்பள்ளி –620023 அவர்களுக்கு பணிந்துனுப்பபடுகிறது.